R 5321 (page 294)

# பிரியமுள்ள மற்றும் பிரியமில்லாத ஆராதனை

## ACCEPTABLE AND UNACCEPTABLE WORSHIP

"தேவன் ஆவியாயிருக்கிறார், அவரைத் தொழுது கொள்கிறவர்கள் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள வேண்டும்."
- யோவான் 4

ஆராதனை என்பது முறைப்படியும் சரியான நோக்கத்துடன் தேவனுக்கு பிரியமாக இருக்கும்படி பரிசுத்தமானவர்களுக்கான வெளியரங்கமான பயபக்தியாகும். ஆராதனை செய்வதின் மனோபாவத்தை யூகிக்க முடியும். எனினும் தேவனுக்கு பிரியமில்லாமல் ஆராதனை செய்ய முடியும். நமது கர்த்தர் சமாரிய ஸ்திரீயிடம் பேசும் போது எப்படிப்பட்ட ஆராதனை தேவனுக்கு பிரியமானது என்று அறிவிக்கிறார். ஒருவர் குனிந்து ஆராதித்தும் தேவனுக்கு பிரியமில்லாதிருக்கக் கூடும். ஆவியோடும் உண்மையோடும் ஏறெடுக்கும் ஆராதனையே தேவனுக்கு பிரியமானது என்று கர்த்தர் இங்கே குறிப்பிடுகிறார்!

ஆவியோடு ஆராதிப்பதற்கும் உண்மையோடு ஆராதிப்பதற்கும் இடையே உள்ள வித்தியாசத்தை நமது கர்த்தர் குறிப்பிடுகிறார். நாம் சத்தியத்தை பெற்று கர்த்தரைப் பற்றி மிகவும் அறிந்திருப்போம்; ஆனால் நாம் ஆவியுடன் அவரிடம் போகவில்லையென்றால், அதாவது சரியான மனோபாவத்துடன் போகவில்லை என்றால், எவ்வளவு தான் நாம் அறிவை பெற்றிருந்தாலும் அது தேவனுக்கு பிரியமாயிருக்காது. அதாவது ஒருபுறஜாதி மனுஷன் மிகவும் ஆவியுடன் ஆராதனை செய்தாலும், அவன் சத்தியத்தை அறியவில்லை என்றால் தேவனுக்கு பிரியமான ஆராதனையை அவனால் செய்ய இயலாது. உதாரணத்திற்கு கொர்நெலியு, நூற்றுக்கதிபதியை எடுத்துக்கொள்ளுங்கள். அவன் அடிக்கடி ஜெபித்து வந்தான். ஏழைகளுக்கு தானம் தருமங்களை அதிகமாக கொடுத்து வந்தான். ஆனால் அவன் ஒரு புறஜாதியான். அவன் தேவனிடத்தில் நெருங்கக்கூடிய மனோபாவத்தை பெற்றிருந்தான். ஆனால் அந்த சமயத்தில் தேவன் அவனை ஏற்றுக்கொள்ளவில்லை. ஏன் ஏற்றுக்கொள்ள வில்லை? ஏனெனில் அவன் சத்தியத்தை அறியவில்லை. புறஜாதியாருக்கான காலம் வரும்வரை அவனால் சத்தியத்தை அறிய முடியவில்லை. ஆனால் ஏற்ற காலம் வந்த போது, தேவனிடமிருந்து சத்தியத்தைப் பெற்ற முதல் புறஜாதியான் கொர்நெலியுதான். அதன் மூலம் அவன் ஆவியுடன் மாத்திரமல்ல சத்தியத்துடனும் ஆராதிக்கக் கூடியவனாக இருந்தான். அவனுடைய ஜெபங்கள் தேவனால் ஏற்றுக்கொள்ளப்பட்டன என்கிற உறுதிமொழியை அவன் பெற்றான்.

கொர்நெலியுவுக்கு அனுப்பிய சத்தியம் மிக முக்கியமான ஒன்றாக இருக்கிறது. அதன்மூலம் நாம் அனைவரும் தேவனிடத்தில் நெருங்கி வரவும் ஏற்றுக்கொள்ளப்படக்கூடியவர்களாகவும் இருக்க வேண்டும். கொர்நெலியு ஒரு பாவியாக இருந்தால் கூட, தேவன், கிறிஸ்துவை ஒரு இரட்சகராக, பாவத்திற்கான ஒரு பரிசுத்தமாக்குதலுக்காக கொடுத்திருக்கிறார் என்கிற இந்த சத்தியம் அவனுக்கு அவசியமாயிருந்தது. இயேசுவின் ஒரு சீஷனாக ஆகி, அவரால் சொல்லப்பட்டபடி தேவனுடைய சித்தத்தை செய்ய நாடினால் தேவனுடைய ஏற்பாடுகளுக்கு இசைவாக அவனால் இருக்கக்கூடும் என்பதை அவன் அறிந்து கொண்டான். கொர்நெலியு அறியும்படி செய்யப்பட்ட மாபெரும் சத்தியது இது தான். அவன் பரிசுத்த ஆவியைப் பெற்று தேவனுடைய குடும்பத்திற்குள் வந்தான்.

இது இந்த காலத்திற்கும் ஏற்புடைய சத்தியமாக இருக்கிறது. ஆவியின்படி ஆராதிக்கிறவர்களாக இருந்தும், இயேசுவைப் பற்றிய சத்தியத்தை அறியாத ஜனங்கள் புறஜாதி தேசங்களில் இருக்கிறார்கள். தேவனை சரியானபடி ஆராதிக்கிறவனாவதற்கு முன்பு இந்த சத்தியம் அவனுக்கு அறியப்பட வேண்டும்.

நமது தலைப்பு வசனத்தில் சொல்லப்பட்ட சமாரிய ஸ்திரீக்கு கூட இந்த காரியம் உண்மையாக இருக்கிறது. சமாரியர்கள் புறஜாதி ஜனங்களாக இருந்தார்கள். அவர்கள் தேவனை சமாரியாவின் மலையில் கெர்சீம் மலையின்மேல் தொழுதுவந்தார்கள். அந்த தேவன் அவர்களுடைய தேவன் என்று நினைப்பதில் சந்தோஷப்பட்டார்கள். இயேசு விசாரித்த இந்த சமாரிய ஸ்திரீ கூறியதாவது: “நாங்கள் சமாரியா மலையில் தேவனை தொழுது கொள்ளுகிறோம். ஆனால் யூதராகிய நீங்கள் தேவனை எருசலேமில் இருக்கிற ஸ்தலத்திலே தொழுது கொள்ள வேண்டும் என்கிறீர்கள்.”

இயேசு அவளிடம் விவரித்து கூறியதாவது: “நீங்கள் அறியாததை தொழுது கொள்ளுகிறீர்கள். நாங்கள் அறிந்திருக்கிறதை தொழுது கொள்ளுகிறோம். அதாவது யூதர்களாகிய எங்களுக்கு சத்தியம் அதிலே இருக்கிறது. யூதர்களாகிய நாங்கள், எங்கள்

**R5321 : page 295**

தேசத்தோடு ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் கீழ நாங்கள் தேவனை தொழுது கொள்ளுகிறோம். ஜெபத்தில் தேவனிடத்தில் வர நாங்கள் சலுகை பெற்றிருக்கிறோம். தேவன் எங்கள் ஜெபத்தைக் கேட்டு, பதிலளிப்பார். நாங்கள் தேவனுடைய வழிநடத்துதல்படி அவரை தொழுது கொள்ளுகிறோம்.” சமாரியர் மதம்மாறிய யூதர்களாக மாறும் சாத்தியம் இருந்தது. ஆனால் அதன் அவசியத்தை அவர்கள் அறியாதிருந்தார்கள். ஆகையால் அவர்கள் வரவில்லை.

சுவிசேஷ யுகத்தில் நாம் கிறிஸ்து மூலம் அவருடைய உடன் சுதந்தரராகக்கூடிய சலுகையை பெற்றிருக்கிறோம். இப்படியாக சிலர் தேவனுடைய குடும்பத்திற்குள் வந்திருக்கிறார்கள். எனினும் நாம் இந்த சத்தியத்துக்குள் வந்தாலும் சரியான ஆவியுடன் இராவிட்டால் நமது ஜெபங்கள் நமது தலைக்கு மேல் போகாது. நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்து மூலமாக தேவனுடன் அவரது பிள்ளைகளாக சரியான உறவுக்கு வருகிறவர்களே ஆவியுடனும் சத்தியத்துடனும் ஜெபிக்க முடியும். இவர்கள் மற்றும் இவர்கள் மட்டுமே மகா மேன்மையும் அருமையுமான வாக்குத்தத்தங்களின் நிறைவேறுதலை பெறுவார்கள்.

---